

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகில் உள்ள முத்தப்பன்பட்டியில் அமைந்திருக்கும் முன்னாள் சபாநாயகர், ஒன்றிய அமைச்சர் சேடபட்டி இரா.முத்தையா அவர்களின் நினைவு மண்டபத்தில் தமிழ்நாடு பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். உடன் மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர் பொதுமக்கள் பங்கேற்றனர்.



முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (05.11.2025) சென்னையில் காணொலி காட்சி வாயிலாக, ரூ.23 கோடி மதிப்பில், மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு இணையாக மேம்படுத்தப்பட்டு திருச்செங்கோடு அரசு மருத்துவமனையினை பயன்பாட்டிற்கு திறந்து வைத்ததைத் தொடர்ந்து, நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி துர்காமூர்த்தி, நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.மூர்த்தி உட்பட பலர் உள்ளனர்.

### ஆஸ்திரேலியா – மெல்போர்னில் (நவ. 1,2) நடைபெற்ற பெரியார் நான்காவது பன்னாட்டு மனிதநேய மாநாடு!

# தமிழ்நாட்டிலிருந்து 24 பேராளர்கள், பன்னாடுகளிலிருந்தும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பெருமக்கள் பங்கேற்பு!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வெளியிட்டுள்ள அறிக்கை !

**சென்னை, நவ.7 -**

**கடந்த நவம்பர் 1,2 ஆகிய நாள்களில் ஆஸ்திரேலியா - மெல்போர்னில் பெரியார் பன்னாட்டமைப்பும், பெரியார் - அம்பேத்கர் சிந்தனை வட்டமும் இணைந்து நடத்திய பன்னாட்டு மாநாட்டின் சிறப்புகளைப் பாராட்டியும், மாநாடு சிறக்க ஒத்துழைத்தவர்களைப் பாராட்டியும் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-**

அமெரிக்காவில் இயங்கும் பெரியார் பன்னாட்டு அமைப்பு ('Periyar International') தொடங்கி வெள்ளி விழாவைத் தாண்டி, சுமார் 30 ஆண்டுகளாக - மிகச் சிறப்புடன் நடத்தப்பட்டு வருகின்றது.

டாக்டர் சோம.இளங்கோவன், டாக்டர் திருமதி சரோஜா இளங்கோவன் இணையரின் தந்தை பெரியார் பற்றிய அயலகப் பணிகள் அமெரிக்காவில் குடியேறிய டாக்டர் சோம.இளங்கோவன், டாக்டர் திருமதி சரோஜா இளங்கோவன் ஆகியோர் தங்களது டாக்டர் பணியிலிருந்து - ஓய்வு வயதை நிறைவு செய்யும் முன்பே, இதற்கெனவே விருப்ப ஓய்வு பெற்று, முழு நேரமும் பெரியார் பணி தொடர்வதையே தமது தொண்டறமாகத் தொடருகின்றனர்.

பேராசிரியர் டாக்டர் இலக்குவன் தமிழ் போன்ற கொள்கை உறவுகள் பலரும் இத்தொண்டில் திளைத்து, கடமையாற்றுவதில் தனி இன்பம் கண்டு, சலிப்போ, சோர்வோ இன்றி அவ்வமைப்புச் செயல்படுவதைத் தங்களது அறப்பணியாகக் கருதி, பேராதரவு தந்து, நாளும் இப்பெரும் அறிவுத் திருப்பணி - அறப்பணி தொடரத் துணை நிற்கின்றனர்.

எண்ணற்ற பலரும் குடும்பம் குடும்பமாகப் பணிப் பகிர்வு செய்து, தொண்டற இலக்கண, இலக்கியங்களாகி, "பெரியார் உலக மயம் - உலகம் பெரியார் மயம்" என்று உழைக்கின்றனர்.

**ஆஸ்திரேலியாவில் பெரியார் - அம்பேத்கர் சிந்தனை வட்டம்**

இதுபோலவே, சுமார் 4, 5 ஆண்டுகளுக்கு முன்புதான் ஆஸ்திரேலியாவில் பெரியார் - அம்பேத்கர் சிந்தனை வட்டம் ('PATCA') தொடங்கப்பட்டது. அங்கும் ஜாதி, வர்ண பேதம், மனிதநேயத்திற்கு ஆபத்து ஏற்படுத்தும் ஜாதி வெறித்தனம், சமூக ஒற்றுமைக்கு ஊறு விளைவிப்பது, பள்ளிப் பாடப் புத்தகங்கள் வாயிலாக பிஞ்சு உள்ளங்களில் நஞ்சைப் புகுத்தி, இதற்குக் கலாச்சாரப் போர்வை போர்த்தி - அங்குள்ள ஆஸ்திரேலியர்களை ஏமாற்றி நிலைக்கும் திட்டத்தை எதிர்த்துப் பிறந்ததுதான் "பெரியார் - அம்பேத்கர் சிந்தனை வட்டம்."

பெர்த் நகரில் குடியிருக்கும் தானே பதவி (விருப்ப) ஓய்வு பெற்ற, சிறந்த பாரம்பரிய பெரியாரிஸ்ட் ஆன முனைவர் மகிழ்நன் அண்ணாமலை, அதுபோல சிட்னி வாழ் டாக்டர் முகம்மது ஹாரூண் காசிம் மற்றும் அவர்களது கொள்கைக் கூட்டாளிகள் எல்லாம் இணைந்து இந்த அமைப்பை உருவாக்கி, உழைத்து ஆஸ்திரேலியாவில் கேன்பெர்ரோ, கோல்டுகோஸ்ட், பிரிஸ்பேன், மெல்போர்ன் போன்ற பகுதிகளில் வசிக்கும் பல பெரியார் - அம்பேத்கர் கொள்கைப் பற்றாளர்களான குடும்பங்களை ஒருங்கிணைந்து சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

சில ஆண்டுகளுக்கு முன்பு இது பதிவு பெற்றது.

இந்த ஆண்டுத் தொடக்கத்தில், அவர்களையெல்லாம் சந்தித்து, கலந்துரையாடி கொள்கை மகிழ்ச்சியைத் தந்திட, என்னுடன் நமது கழகப் பிரச்சாரச் செயலாளர் வழக்குரைஞர் அருள்மொழி அவர்களும் பயணித்து, முளைத்த செடிக்கு நீர்ப் பாய்ச்சி பாதுகாத்திடுவதற்குரிய வாய்ப்பளித்த மெல்போர்ன் நிகழ்ச்சி, அன்றைய எங்களது கொள்கைப் பயணத்தின் கடைசி நாள் நிகழ்ச்சியாகும்.

**பெரியார் பன்னாட்டு மாநாடுகள் இதுவரை 4 நாடுகளில்!**

அப்போதுதான், பெரியார் பன்னாட்டு அமைப்பின் இயக்குநர் டாக்டர் சோம.இளங்கோவன் அவர்களின் பெருமுயற்சியால், முதல் மாநாடு ஜெர்மனி, இரண்டாவது மாநாடு அமெரிக்கா, மூன்றாவது மாநாடு குறித்து தெரிவித்தார். கனடா என்ற வரிசையில், நான்காவது மாநாட்டினை ஆஸ்திரேலியாவில் நடத்த முன்பே திட்ட மிட்டதை, மெல்போர்ன் தோழர் அரங்க மூர்த்தி தலைமையிலான கழக செயல்வீரர்கள், வீராங்கனைகள் திருமதி ராதிகா சரவணன், இளமதி போன்றோர் பலரும் கடும் உழைப்பைத் தந்தனர். எவ்வித தயக்கமும் இன்றி அங்கே பன்னாட்டு மாநாட்டை நடத்திட முன்வந்த னர்.

அமைப்பின் செயல்மிகு தலைவர் முனைவர் அண்ணா. மகிழ்நன், முகம்மது ஹாரூண் காசிம் ஹாரூண், கேன்பெர்ரோ வாழ் தோழர் சுரேஷ், திருமதி சுமதி விஜயகுமார் போன்ற பலரும் உற்சாகத்துடன் மாநாட்டை நடத்தினர்.

**மெல்போர்னில் சீரும் சிறப்புடனும் நடைபெற்ற இரண்டு நாள் மாநாடுகள்**

மாநாட்டில் கலந்து, அதன் வெற்றியை பூரிப்புடன் நேரில் அனுபவிக்க ஆயத்தமான நிலையில், இங்குள்ள இயக்கப் பணிகளின் அவசரத்தினாலும், உடல்நிலையைக் கருதியும், அவ்வாய்ப்பை நான் இறுதியில் இழக்க வேண்டி வந்தாலும், காணொலிமூலம் அவர்களுடன் கலந்தே மகிழ்ந்தேன் - இணையத்தின்மூலம் இன்பத்



தைப் பெற்றேன் - பெற்றோம்!

ஆஸ்திரேலியா மெல்போர்னில் நடந்த இரண்டு நாள் மாநாட்டிற்கு (நவம்பர் 1, 2) வாழ்த்தியருளிய 'திராவிட மாடல்' ஆட்சி நாயகர் சமூகநீதிக்கான சரித்திர நாயகர் மானமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும், துணை முதலமைச்சரும், தி.மு.க.வின் பகுத்தறிவுப் பாசறையின் இளைய தளபதியுமான மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் வாழ்த்துரைகளும் நிகழ்ச்சித் தொடக்கத்திலேயே சிறப்பான முத்திரை பதித்தன.

**தமிழ்நாட்டிலிருந்து 24 பேராளர்கள் பங்கேற்பு!**

தமிழ்நாட்டிலிருந்து சுமார் 24 பேர் கொண்ட அறிவார்ந்த இருபால் கொள்கை உறவுகள், கழகப் பொருளாளர் மானமிகு வீ.குமரேசன் அவர்களது தலைமையில் சென்று, பேராளர்களாக (Delegates) கலந்து பயனாளிகள் ஆயினர்.

இவ்விழாவிற்கு சிங்கப்பூர், கத்தார், இங்கிலாந்து, ஜப்பான், மலேசியா ஆகிய நாடுகளிலிருந்து பேராளர்கள், கருத்தாளர்களாகவே கலந்து பங்களித்தது மாநாட்டிற்கு மேலும் சிறப்பைக் கூட்டியது.

நிகழ்ச்சியில், நமது கொள்கை வீரர், நாடாளுமன்றத்தில் பெரியார் குரலாக, திராவிடர் குரலாக விளங்கும் மானமிகு ஆ.இராசா, பாரம்பரிய 'திராவிடக் கொள்கை முத்து' தமிழ்நாடு சமூகநீதி கண்காணிப்புக் குழுத் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், பெரியார் மருத்துவக் குழுமத் தலைவர் டாக்டர் இரா.கவுதமன், கருத்தியலாளர்களான வழக்குரைஞர் அ.அருள்மொழி, போராளி ஓவியா, நாடாளுமன்ற உறுப்பினர், புகழ்பெற்ற கவிஞர், எழுத்தாளர் கவிஞர் ராஜாத்தி சல்மா, தமிழ்நாடு அயலகத் தமிழர் நல வாரியத் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி, அர்கேஷ் கவுடா, கருநாடக சட்டவல்லுநர் நண்பர் பேராசிரியர் ரவிவர்ம குமார், கோகுல் கிருபா சங்கர், தொழிலதிபர் சுரேஷ் சம்பந்தம், உச்சநீதிமன்ற மூத்த வழக்குரைஞர், டாக்டர் ஆதித்ய சோந்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர் என்பதெல்லாம் நமக்கு மகிழ்ச்சியைத் தந்தன.

அதையும் தாண்டி, ஆஸ்திரேலிய முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் - ஆஸ்திரேலியா விக்டோரியா நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கரீனா கார்லேண்ட், செனேடர் - நியூ சவுத் வேல்ஸ், ஆஸ்திரேலியா டேவிட் ஷு பிரிட்ஜ், மெல்போர்ன் பல்கலைக் கழகம், ஆஸ்திரேலியா பேராசிரியர் ஹரி பாபுஜி, ஆஸ்திரேலியா டாக்டர் மிஷேல் ஆனந்தராஜா, ஆஸ்திரேலியா டாக்டர் முகம்மது ஹாரூண் காஸிம், ஆஸ்திரேலியா டாக்டர் கார்த்திக் தங்கராஜ், ஆஸ்திரேலியா தினகரன் செல்லையா, மனிதநேய அமைப்பின் முதன்மை அதிகாரி, ஆஸ்திரேலியா மேரி அனி, ஆஸ்திரேலியா பெரியார் - அம்பேத்கர் சிந்தனை வட்டத்தின் செயற்குழு உறுப்பினர் பொன்ராஜ் தங்கமணி, மொனாஷ் பல்கலைக் கழகப் பேராசிரியர் பால் லாங், சட்டக் கல்வி மாணவி, ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகம் இனியா பிரபு வசுமதி, சிங்கப்பூர் கவிஞர் மா.அன்பழகன், கத்தார் மோகித் பலகிரி, நாட்டிங்கம் நிங்போ பல்கலைக் கழகம், சீனா - பேராசிரியர் விக்ரந்த் கிஷோர், மேனாள் மூத்த அரசியல் அதிகாரி, அய்க்கியநாட்டுச் சபை டாக்டர் ஆர்.கண்ணன், ஜப்பான் எஸ்.கமலக்கண்ணன், பெரியார் பன்னாட்டு அமைப்பின் மலேசிய தலைவர் டாக்டர் எம்.கோவிந்தசாமி, மிஷிகன் பல்கலைக் கழகம், அமெரிக்கா பேராசிரியர் ராம் மகாலிங்கம், கிளஸ்டர், இங்கிலாந்து பேராசிரியர் செந்தில்குமார், இங்கிலாந்து ஹரிஷ் மாரிமுத்து ஆகியோரின் கருத்தாழமிக்க உரைகள்பற்றி என்னிடம் தோழர்கள் உரைத்தபோது ஏற்பட்ட மகிழ்ச்சி, மற்றொருபுறம் அவற்றையெல்லாம் கேட்டிருந்தால், நம் வயது இன்னும் குறைந்து, மேலும் உழைக்கின்ற உறுதியைப் பெற்றிருக்கலாமே என்றே எண்ணத் தோன்றியது.

மாநாட்டின் வெற்றிக்கு உழைத்த அத்துணைத் தோழர்களுக்கும் எமது நெஞ்சம் நிறைந்த பாராட்டுகளும், வாழ்த்துகளும், நன்றியும்!

பெரியார் பன்னாட்டு அமைப்பு இணைந்து நடத்தும் அடுத்த மாநாடு ஜப்பான் அல்லது தென்னாப்பிரிக்காவில் இருக்கலாம்!

உழைத்த தோழர்களுக்கு கைகளைக் குலுக்கி, கூப்பி மகிழ்ந்து, அவர்களுக்கு நமது 'சல்யூட்', 'சல்யூட்', 'சல்யூட்!'

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

# மிசா.கு.பாலகிருஷ்ணன் சகோதரி தனலட்சுமி அம்மையார் நினைவேந்தல்!

திருவாரூர், நவ .7 –

மகாதேவபட்டணம் நினைவில் வாழும் நல்லாசிரியர் ஜெ.நடராஜன் அவர்களுடைய மனைவியும்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மிசா. கு.பா.என்கிற கு. பாலகிருஷ்ணன் அவர்களுடைய அன்பு சகோதரியும், திருமதி. இளவரசி ராஜ்குமார், திருமதி. மணிமேகலை சேகர், திரு என்.ராஜசேகர்,மகாதேவப்பட்டணம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவரும், முன்னாள் ஒன்றியக் குழு உறுப்பினருமான. எம்.என் பாரதிமோகன்,கும்பகோணம் பரஸ்பர வங்கி மேலாளர் ஜெ.என்.சுகுமாரன், மன்னார்குடி நகர கூட்டுறவு வீட்டு வசதி வீட்டு வசதி சங்க அலுவலர் செ.என்.ராஜசோழன் ஆகியோரின் அன்பு தாயாருமான, திருமதி தனலட்சுமி நடராஜன் அவர்கள் இயற்கை எழுதியதை முன்னிட்டு 03.11.2025 அன்று மாலை 6:30 மணிஅளவில் அம்மையாரின் திருவுவப் படத்தை கழக சட்ட திருத்தக் குழு தலைவர் மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. திறந்து வைத்து புகழுஞ்சலி செலுத்தினார்.

இந்நிகழ்ச்சி முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் பி.ராசமாணிக்கம் தலைமையிலும், நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வி. செல்வராஜ்,மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி. பாலு, வலங்கைமான்ஒன்றிய கழக செயலாளர் வீ.அன்பரசன், தலைமை செயற்குழு உறுப்பினர் சு.ஞானசேகரன், மாவட்ட கழக அவைத் தலைவர் க.தன்ராஜ், மாநில மாணவரணி து. அமைப்பாளர் மன்னை த.சோழராஜன், மாவட்ட திராவிட கழக தலைவர் ஆர்.பி. சித்தார்த்தன், ஒன்றிய கழக செயலாளர்கள் கோட்டூர் வீ.எஸ்.ஆர். தேவதாஸ், டி.எஸ்.டி முத்துவேல், சித்தேரி பி.சிவா, ந. கவியரசு ,மதுக்கூர் ஆர்.இளங்கோ, ஐ.வி. குமரேசன், நகர கழக செயலாளர்கள் வீரா. கணேசன்,ஆர். எஸ். பாண்டியன் தொகுதி பார்வையாளர் ராஜா சீனிவாசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் அரிச்சந்திரபுரம் த.செல்வம், பேரூராட்சி தலைவர் ஆர்.ஆர். ராமராஜன், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியை பைங்காநாடு க.மலர்வேந்தன் தொகுத்து வழங்கினார். முன்னாள் ஒன்றிய கழக செயலாளர் நன்னிலம் வரத கோ. ஆனந்த்,கழக பொதுக்குழு உறுப்பினர்கள் மு.ருசுவேல்ட், ராஜ. பூபாலன், கலைவாணி மோகன், தெ. காஞ்சிதுரை, மாவட்டம் மகளிர் அணி தலைவர் ராணி சேகர், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சோபா கணேசன்,மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் வீரா. தேசபந்து, மு. பொதுக் குழு உறுப்பினர் வ.முத்துராமகிருஷ்ணன்,

திருவாரூர் எஸ்.என். அசோகன் மற்றும் மாற்று கட்சி தோழர்கள்,கழக சார்பு அணி நிர்வாகிகள் ஒன்றிய, நகர, கிளை, வார்டு கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் கலந்துகொண்டனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி மரக்காணம் கிழக்கு, மேற்கு, மத்திய ஒன்றிய தி.மு.க. மற்றும் மரக்காணம் பேரூர் கழக தி.மு.க. சார்பில் சிறுவாடியில்நடைபெற்ற வாக்குச்சாவடி முகவர்கள், பூத் ஏஜென்ட் நிர்வாகிகள் கலந்து கொண்ட ஆலோசனை கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், ஒன்றிய செயலாளர்கள் தயாளன், பழனி, ரவிச்சந்திரன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

### தி.மு.க. வர்த்தகர் அணி

# மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் / பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. வர்த்தகர் அணியின் மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

## விழுப்புரம் தெற்கு மாவட்டம்

தலைவர் - பி. ராஜபாண்டியன் 11/5, மைல்கல் தெரு, விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணைத் தலைவர் - கோ. தயாளன் அயினம்பாளையம் புது குடியிருப்பு, திருவாமாத்தூர் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

அமைப்பாளர் - கே. சரவணகுமார் அமைச்சார் அம்மன் கோவில் தெரு, திருவெண்ணெய்நல்லூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) டி. முருகன் மாரியம்மன் கோவில் தெரு, அடங்குணம், அன்னியூர் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம். 2) ஜெ. நடராஜன் மல்லிகாபுரம் தெரு, வீரபாண்டி அஞ்சல், திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 3) எஸ். பழனிவேல் 6, அய்யனார் கோவில் தெரு, திருவெண்ணெய்நல்லூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 4) பி. ராமசந்திரன் 2, தியாகி வடிவேல் நகர், திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 5) தே. துரைராஜ் 126, மேல வீதி, திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 6) த. வேலாயுதம் மெயின் ரோடு, திருவெண்ணெய்நல்லூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 7) சி. ராஜ் கணேஷ் மாரியம்மன் கோவில் தெரு, ஒட்டன்காடுவெட்டி, மாம்பாழப்பட்டு மற்றும் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

## தஞ்சை வடக்கு மாவட்டம்

### கும்பகோணம் மாநகரம்

தலைவர் - கே. ராஜா, 103, உப்புக்கார தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - துரை அசோக் (எ) டி. அம்ரிஷ் 68, செல்வாசாரங்கபாணி தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

அமைப்பாளர் - என். நந்தகுமார் சாரங்கபாணி தெற்கு வீதி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ்.எஸ். இரவிச்சந்திரன் 13ஏ, அன்னை காம்பளக்ஸ், கோதண்டபாணி தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 2) த. வேல்முருகன் 20, எம்.எம்.ஆர். நகர் பழைய பாலக்கரை, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 3) எஸ். செல்வராஜ் நாச்சியார் கோவில் வழி நடப்பு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 4) வி. முருகன் 23/11, கே.ஜி.கே. தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 5) டி. செந்தில்குமரன் 9, மஞ்சக்கார தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

## கடலூர் மேற்கு மாவட்டம்

கடலூர் மேற்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் டி.ஆர்.வி. ரமேஷ் அவர்களுக்கு பதிலாக, **பி. குணா (எ) குணசேகரன்**, (97, வ.உ.சி. தெரு, பண்ருட்டி, கடலூர் மாவட்டம்.) அவர்கள் கடலூர் மேற்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 05-11-2025.

**காசி முத்துமாணிக்கம்**
செயலாளர்
தி.மு.க. வர்த்தகர் அணி




கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதி, கள்ளக்குறிச்சி வடக்கு ஒன்றிய கழகம் சார்பில், வாக்குச்சாவடி முகவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம், வடக்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ்.பி.அரவிந்தன் தலைமையில், வடக்கு ஒன்றிய கழக அவைத்தலைவர் வி.ரவிக்குமார் வரவேற்புரையில் மோ.வன்னஞ்சூர் ஸ்ரீ சுபம் மஹாலில் நடைபெற்றது, இக்கூட்டத்தில் வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் (SIR) பணிகளில் எவ்வாறு செயல்படுவது குறித்து கழக நிர்வாகிகளுக்கு பல்வேறு சிறப்பு கருத்துக்களை வழங்கினார். இதில் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### முனைவர் மா. நன்னன்

### நவம்பர் 7 (2017)



தந்தை பெரியார், புரட்சிக் கவிஞர் பாவேந்தர், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், பேராசிரியர் அன்பழகனார் ஆகியோரோடு நட்புக் கொண்டு, பகுத்தறிவுக் கொள்கைப் பாதையில் தொடர்ந்து பயணித்தவர்.

தொடக்கப்பள்ளி முதல் படிப்படியாக உழைப்பால் உயர்ந்து, கல்லூரிப் பேராசிரியர், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் எனப் பணியாற்றி பல பெருமைகளைப் பெற்றவர்.

திராவிட இயக்கம், சுயமரியாதை, தன்மானம், பகுத்தறிவு, தமிழ் மொழி ஆகியவற்றில் பற்றுக்கொண்டு வாழ்ந்தவர். இளைஞர்களுக்கு திராவிட இயக்க உணர்வுகளை ஊட்டி தமிழ்த் தொண்டு ஆற்றி வந்தவர். கழகத்தின் தொடக்க காலத்திலிருந்தே உறுப்பினராக இருந்தவர். கழக தலைமை இலக்கிய அணியில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராக இருந்தபோது, கழக இளைஞர் அணி சார்பில் தமிழகம் முழுவதும் நடைபெற்ற ஒவ்வொரு "பயிற்சி பாசறை" வகுப்புகளில் பங்கேற்று சமூகநீதி, திராவிட இயக்கம், சுயமரியாதை பற்றி கழக இளைஞர் அணியினருக்கு விளக்கியவர்.

1991–ல் நடைபெற்ற முப்பெரும் விழாவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திருக்கரங்களால் "பெரியார் விருது" பெற்றவர். அத்துடன் இவரது தமிழ்ப் பணிக்காக "தமிழ்ச் செம்மல் விருது", "திரு.வி.க. விருது" ஆகிய விருதுகளை பெற்றவர்.

தம் வாழ்நாளில் பெரும் பகுதியை தமிழ்மொழி கற்பித்தல், வளர்த்தல், பிழை திருத்தல், செம்மைப் படுத்துதல் என்ற முறையில் பணியாற்றி, பகுத்தறிவு நெறி தழுவி வாழ்வாங்கு வாழ்ந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**